# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை- 2020

**தரம் 13 (2020)** | **பொருளியல்- 21-T-1** | **இரண்டு மணித்தியாலம்**

**அறிவுறுத்தல்கள்**
- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.)**

1. பின்வருவனவற்றுள் நேர்கூற்றை இனங்காண்க.
   1) போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்கு வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வையை அதிகரிக்க வேண்டும்.
   2) 2018 தொடர்பாக 2019ல் பணவீக்கத்தில் சிறியளவான அதிகரிப்பு எற்பட்டுள்ளது.
   3) தற்போதுள்ள வேலையில்லாப் பிரச்சனையை தீர்ப்பதற்கு அரசாங்கம் தனியார் துறையின் செயற்பாடுகளை ஊக்கவிக்க வேண்டும்.
   4) வற்வரி குறைக்கப்பட்டால் அரசின் கடன்சுமை அதிகரிக்கும்.
   5) புதிய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டினை அபிவிருத்தி நோக்கி அழைத்துச் செல்லும்.

2. வனவளம், கடல்வளம் என்பன ஒரு நாட்டின் பிரதான வளங்களாகும். இவ் வளங்கள் எந்த வகைக்குள் உள்ளடங்கியுள்ளன.
   1) பொருளாதார வளம்.
   2) பொருளாதாரமற்ற வளம்.
   3) மிள்உருவாக்கக்கூடிய வளம்.
   4) இயற்கை வளம்.
   5) அருமைத் தன்மை கொண்டவை.

3. ஒரு நாட்டின் உற்பத்தி இயல்தகவு வளையியின் உற்பத்திப் புள்ளியானது படத்தில் காட்டப்பட்டவாறு A இலிருந்த Bயை நோக்கி நகருகின்றது. இந்நிலையில் நிகழ்கால மற்றும் எதிர்கால வாழ்க்கைத்தரம் எவ்வாறு காணப்படும்.




| | நிகழ்கால வாழ்க்கைத் தரம் | எதிர்கால வாழ்க்கைத் தரம் |
|---|---|---|
| 1. | குறைவு | குறைவு |
| 2. | குறைவு | அதிகம். |
| 3. | மாறாது | குறைவு |
| 4. | மாறாது | அதிகம் |
| 5. | அதிகம் | குறைவு |

4. பின்வருவனவற்றுள் சந்தைப் பொருளாதாரத்தின் முக்கிய பண்பாக அமைவது எது?
   1) விலைப் பொறிமுறை.
   2) மத்திய திட்டமிடல்
   3) சமூகநலன்.
   4) அரசதலையீடு.
   5) அரச சொத்துடமை.

5. பொருளாதார முறைமையின் குறிக்கோள்.
   1) தீர்மானம் மேற்கொள்ளும் குழுக்களிடையே தொடர்பைக் கட்டியெழுப்புதல்.
   2) உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் நுகர்வு மீது தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.
   3) அருமைப் பிரச்சனையைத் தீர்த்தல்.
   4) உற்பத்தியாளர், நுகர்வோருக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
   5) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்த்தல்.

6. பின்வருவனவற்றுள் பொருளொன்றின் கேள்வி வளையியை வலப்புறமாக நகர்த்தும் காரணி எது.
   1) பொருளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.
   2) பொருளின் விலையில் ஏற்படும் குறைவு.
   3) நுகர்வோனின் வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு.
   4) நுகர்வோனின் வருமானத்தில் ஏற்படும் குறைவு.
   5) பொருளொன்றின் கேள்வித் தொகையில் ஏற்படும் அதிகரிப்பு.

7. பின்வருவனவற்றுள் எதன் மூலம் இரு பொருட்கள் ஒன்றுக்கொன்று நெருங்கிய பதிலீடானவை என்பது எடுத்துக்காட்டப்படும்.
   1) நேர்க்கணிய வருமான கேள்வி நெகிழ்ச்சி.
   2) பூச்சியத்தைவிடக் குறைந்த குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி.
   3) ஒன்றுக்கு குறைவான விலைக்கேள்வி நெகிழ்ச்சி.
   4) நேர்க்கணிய ஒன்றுக்கு கூடிய குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி.
   5) கிடையச்சிற்கு சமாந்தரமான கேள்வி வளையி.

8. பின்வருவனவற்றுள் கேள்வி வளையி ஒன்றினை வரையும்போது நிலையாகவுள்ளதாக கருதப்படாதது யாது?
   1) நுகர்வோனின் பணவருமானம்.
   2) நுகர்வோனின் சுவை.
   3) பதிலீடுகளின் விலைகள்.
   4) குறித்த பொருளின் விலை.
   3) நிரப்புப் பொருட்களின் விலைகள்.

9. பண்டமொன்றின் கேள்வியில் எத்தகைய மாற்றமும் எற்படாத போதிலும் குறித்த பண்டத்தினது விலை குறைவடைய அதன் பரிமாற்றல் தொகை அதிகரித்தது. இதற்கு ஏதுவாக அமையாதது எது?
   1) குறித்த பண்டத்தினது நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு.
   2) நுகர்வோனது வருமானத்தில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி.
   3) உற்பத்திச் செலவில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி.
   4) உற்பத்தி தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றம்.
   5) உற்பத்தியாளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு.

10. அரிசியின் விலை அதிகரித்த போதும் அரிசி மீது நுகர்வோன் மேற்கொண்ட செலவு மாற்ற மின்றிக் காணப்பட்டது. இந்நிலைக்கு பொருத்தமானது.
   1) அரிசிக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாக காணப்பட்டதால்.
   2) அரிசிக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சியற்றதாக காணப்பட்டதால்.
   3) அரிசிக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாகக் காணப்பட்டதால்.
   4) அரிசிக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி முடிவிலியாகக் காணப்பட்டதால்.
   5) அரிசிக்கான விலைக் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமமானதாக காணப்பட்டதால்

11. நிறுவனம் ஒன்று A, B ஆகிய பண்டங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குகின்றது. அவற்றின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சிப் பெறுமானங்கள்

A பண்டம். -2.23 B பண்டம். -0.84

இப்பண்டங்களின் விலைகள் முறையே 10% ஆலும் 20% ஆலும் அதிகரிக்கும் போது.

| | A பண்டம் தொடர்பான மொத்த வருமானம் | Bபண்டம் தொடர்பான மொத்த வருமானம் |
|---|---|---|
| 1 | அதிகரிக்கும் | குறையும் |
| 2 | குறையும் | அதிகரிக்கும் |
| 3 | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4 | குறையும் | குறையும் |
| 5 | குறையும் | மாறாது |

12. சந்தையொன்றிலுள்ள பண்டமொன்றின் சந்தை நிரம்பல் கோடு பின்வருமாறு அமைந்ததுள்ளது.




1) எல்லா நிரம்பல் தொகைகளிலும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி மாறாதிருக்கும்.
2) எல்லா நிரம்பல் தொகைகளிலும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்..
3) நிரம்பல் தொகை அதிகரிக்க விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி குறையும்.
4) நிரம்பல் தொகை அதிகரிக்க விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரிக்கும் ஆனால் நெகிழ்வற்றதாக அமையும்.
5) நிரம்பல் தொகை அதிகரிக்க விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரித்து நெகிழ்ச்சி உடையதாக மாறும்.

13. சில பண்டங்களின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி வருமாறு.

| பண்டங்கள். | விலை சார் கேள்வி நெகிழ்ச்சி. |
|---|---|
| A | 0.0 |
| B | -0.75 |
| C | -1.0 |
| D | -1.75 |

மேற்குறித்த பண்டங்களின் விலையினை 4% ஆல் குறைத்தால் எப் பண்டத்தின் விற்பனை வருமானம் அதிகரிக்கும்.

1) A 2) B 3) C 4) D 5) B,C

14. குறித்த பொருள் போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படுவதாக கருதுக. அப்பொருள் உற்பத்தியின் மீது அலகு வரி விதிக்கப்பட்டால் பின்வருவனவற்றுள் சரியானது எது?
1) கேள்விக்கோடு பூரண நெகிழ்வுள்ளதாயின் விலையானது வரியின் அளவினால் அதிகரிக்காது.
2) கேள்விக்கோடு பூரண நெகிழ்வற்றதாயின் விலையானது வரியின் அளவினால் அதிகரிக்காது.
3) கேள்விக்கோடு அதிக நெகிழ்வுள்ளதாயின் நுகர்வோரின் வரிச்சுமை அதிகரிக்கும்.
4) கேள்விக்கோடு குறைந்த நெகிழ்வுள்ளதாயின் நுகர்வோரின் வரிச்சுமை அதிகரிக்கும்.
5) வரியின் விளைவாக நுகர்வோன் மிகை அதிகரிக்கும்.

15. பண்டம் ஒன்றின் மீதான நுகர்வை அதிகரிக்க செய்ய அரசாங்கம் மானியக் கொடுப்பனவை வழங்குகின்றது. எத்தகைய கேள்வி, நிரம்பல் விலைசார் நெகிழ்ச்சியின்போது அது செயற்திறன் மிக்கதாக அமையும்.

| | விலை சார் கேள்வி நெகிழ்ச்சி | விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | நெகிழ்ச்சியற்றது | நெகிழ்ச்சியுடையது. |
| 2. | நெகிழ்ச்சியுடையது. | நெகிழ்ச்சியுடையது. |
| 3. | நெகிழ்ச்சியற்றது. | நெகிழ்ச்சியற்றது |
| 4. | பூரண நெகிழ்ச்சியுடையது | பூரண நெகிழ்ச்சியற்றது |
| 5. | பூரண நெகிழ்ச்சியற்றது | பூரண நெகிழ்ச்சியுடையது |

16. குறித்த பண்டமொன்றிற்கு இழிவு விலையை அமுல்படுத்திய பின்னர் விலை ஆதரவுக் கொள்கை முறையில் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதன் பொருளாதார விளைவை பின்வரும் வரைபு காட்டுகிறது. இந்நிலையில் சமூகநல இழப்பு யாது?




1) D 2) E 3) CHGFE 4) CH 5) CDEFGH

17. குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் மொத்த வெளியீடு அதிகரிக்கும் வேகம் குறைவாக உள்ள போது காணப்படக்கூடியது.
   1) எல்லை உற்பத்தி அதிகரித்துச் செல்லும்.
   2) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும்.
   3) சராசரி உற்பத்தி எதிர்க் கணியமாதல்.
   4) எல்லை உற்பத்தி எதிர்க் கணியமாதல்.
   5) சராசரி நிலையான செலவு அதிகரித்தல்.

18. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியானது எச்சந்தர்ப்பத்தில் தோற்றம் பெறும்.
   1) மொத்த உற்பத்தி உயர்வடையும் போது.
   2) மொத்த உற்பத்தி வீழ்ச்சியடையும் போது.
   3) எல்லை உற்பத்தி உயர்வடையும் போது.
   4) எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும் போது.
   5) சராசரி உற்பத்தி உயர்வடையும் போது.

19. நிறைபோட்டி நிறுவனமொன்று எத்தகைய நிலமையின்போது நட்டத்தைக் குறைக்க சந்தையிலிருந்து வெளியேறும்.
   1) மொத்த வருமானமும் மொத்த செலவும் சமனாக அமையும்போது.
   2) மொத்த வருமானம் மொத்த மாறும் செலவுக்கு சமமாய் உள்ள போது.
   3) பண்ட விலையானது சராசரி மொத்த செலவுக்கு சமமாய் அமையும்போது
   4) பண்ட விலையானது சராசரி மாறும் செலவுக்கு சமமாய் அமையும்போது.
   5) பண்ட விலையானது சராசரி மாறும் செலவைவிட குறைவாய் அமையும் போது.

20. நிறுவனமானது 200 அலகினை உற்பத்தி செய்கின்றபோது ஒரு அலகிற்கான நிலையான செலவு யாது?




1) 1000 2) 5 3) 50 4) 25 5) 100

21. பின்வருவனவற்றுள் எச்சந்தையமைப்பினுள் நிறுவனங்கள் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருக்க முடியும்.
   1) சிலருரிமை 2) தனியுரிமை 3) நிறைபோட்டி
   4) இயற்கைத் தனியுரிமை 5) தனியுரிமைப் போட்டி.

22. வர்த்தக சகடவோட்டம் ஒன்றின் பின்னடைவுக் கட்டத்தில் பின்வருவனவற்றுள் எது நிகழக்கூடும்.
   1) வேலையின்மையும். மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதிகரிக்கும்.
   2) வேலையின்மையும். மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் குறைவடையும்..
   3) மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவடைய வேலையின்மை அதிகரிக்கும்.
   4) மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவடைய பணவீக்கம் அதிகரிக்கும்.
   5) பணவீக்கமும், மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதிகரிக்கும்.

23. உற்பத்தியாளன் விலை என்பதனால் கருதப்படுவது யாது?
   1) உற்பத்தி நிலையத்திலிருந்து வியாரிகளை நோக்கி பொருள் செல்லும்போது உற்பத்தியாளரால் அறவிடப்படும் விலையாகும்.
   2) நுகர்வோன் உண்மையாகவே பொருட்கள் சேவைகளுக்கு கொடுக்கும் விலையாகும்.
   3) உற்பத்தியாளன் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து விற்பனைக்கு தயாராக வைத்திருக்கும் விலையாகும்.
   4) அடிப்படையாண்டின் விலையாகும்.
   5) நடப்பாண்டு விலையாகும்.

24. மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் இடைநிலைப் பொருட்களின் பெறுமதி உள்ளடக்கப் படாமைக்கான காரணம் யாது?
   1) அவை நடப்பு வருடத்தில் நுகரப்படுகின்றமையாகும்.
   2) பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லா இடைநிலைப் பொருட்கள் தொடர்பிலும் தகவல்களைத் திரட்டுதல் மிகக்கடினமான பணி என்பதனாலாகும்.
   3) அவை பொருட் சந்தையில் மாத்திரம் விற்கப்படுகின்றமையாகும்.
   4) சமூகத்தின் நலனைக் குறைவடையச் செய்யும் பொருட்கள் உள்ளடக்கப்படுவதனைத் தடுத்தலாகும்.
   5) அவற்றின் பெறுமதிகள் இருதடவைகள் கூட்டப்படுவதையும் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி மிகைமதிப்புடையதாவதையும் தடுத்தலாகும்.

25. மொத்தத் தேசிய வருமானத்தைக் கணிப்பிடும் போது அதில் உள்ளடக்கப்படாதது எது?
   1) தொழிலாளருக்கு வழங்கப்படும் நிதியுதவிகள்.
   2) பங்குதாரருக்கு செலுத்தப்பட்ட பங்குலாபங்கள்.
   3) கம்பனியின் பகிரப்படாத இலாபங்கள்.
   4) நிலவுரிமையாளருக்குச் செலுத்தப்பட்ட வாடகைகள்.
   5) வள உரிமையாளருக்கு செலுத்தப்பட்ட சொத்து வருமானங்கள்.

26. எளிய பொருளாதாரமொன்றில் நுகர்வுச் சமன்பாடானது $C = 400 + 0.6y$ என்பதிலிருந்தது $C = 500 + 0.75Y$ என மாற்றமடைந்தது. இதனால் சமநிலை வெளியீட்ட மட்த்தில் எற்படும் மாற்றம் யாது?
   1) 2000 இனால் அதிகரிக்கும்.
   2) 2000 இனால் குறைவடையும்.
   3) 1000 இனால் அதிகரிக்கும்.
   4) 1000 இனால் குறைவடையும்.
   5) 400 ஆல் அதிகரிக்கும்.

27. திறந்த பொருளாதாரம் ஒன்றின் உட்பாய்ச்சல்களைச் சரியாகக் காட்டுவது.
   1) முதலீடு. அரச கொள்வனவுகள், ஏற்றுமதி.
   2) சேமிப்புக்கள் நேர்வரிகள், இறக்குமதிகள்.
   3) சேமிப்புக்கள், அரச கொள்வனவுள், இறக்குமதிகள்.
   4) முதலீடு, நேர்வரிகள், இறக்குமதிகள்.
   5) முதலீடு, அரச கொள்வனவுகள், இறக்குமதிகள்.

28. நாடொன்றின் பொருளாதாரத் தரவுகள் வருமாறு.

| | | |
|---|---|---|
| இறக்குமதிகள் 30 | சேமிப்புக்கள் 45 | அரச செலவு 30 |
| நேர்வரிகள் 35 | முதலீடுகள் 40 | ஏற்றுமதிகள் 20 |

இத்தரவுகளின் அடிப்படையில் சரியானதைத் தெரிவு செய்க.
   1) வரவு செலவுத்திட்ட குறை நிலையுள்ளது.
   2) பொருளாதாரம் பேரினச் சமநிலையில் உள்ளது.
   3) உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களை விட உயர்வாகவுள்ளது.
   4) வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களைவிட உயர்வாகவுள்ளது.
   5) பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

29. பின்வருவனவற்றுள் எது மொத்த கேள்வியை அதிகரிக்கச் செய்யும்.
   1) அரச செலவிட்டில் எற்படும் அதிகரிப்பு.
   2) மொத்த இறக்குமதியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
   3) வட்டி வீதத்தில் எற்படும் அதிகரிப்பு.
   4) வரியில் ஏற்படும் அதிகரிப்பு
   5) மொத்த ஏற்றுமதியில் ஏற்படும் அதிகரிப்பு.

30. வருமானமானது 15000லிருந்து 25000 மாக அதிகரிக்கும்போது நுகர்வானது 12000லிருந்த 20000 ஆக அதிகரித்தது. எனின் பெருக்கியின் பெறுமதி யாது?
   1) 2    2) 3    3) 4    4) 5    5) 2.5

31.



மேற்காட்டிய வரைபில் எளிய பொருளாதாரத்தில் முதலீட்டில் ஏற்பட்ட மாற்றத்தால் சமநிலை வெளியீடு மாற்றமடைந்துள்ளதை காட்டுகின்றது. இதிலிருந்து எல்லை நுகர்வு நாட்டம் பெருக்கி தொடர்காக சரியாக அமைவது.

1) 0.8, 4 2) 0.6, 2.5 3) 0.75, 4 4) 0.9, 10 5) 0.8, 5

32. பொருளாதாரமொன்றினது பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படத்தக்கூடிய நிரம்பல்பக்க காரணியாக எதனைக் கொள்ளலாம்.
   1) பணநிரம்பலில் எற்படும் அதிகரிப்பு.
   2) மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் அதிகரித்தல்.
   3) உற்பத்திக் காரணிகளுக்கான கொடுப்பனவு அதிகரித்தல்.
   4) அரச கொள்வனவுகள் அதிகரித்தல்.
   5) தேறிய ஏற்றமதியில் ஏற்படும் அதிகரிப்பு.

33. பொருளாதாரமொன்றின் பணநிரம்பலின் பெறுமதி 4000 ஆகவும் பணத்தின் சுழற்சி வேகம் 4 ஆகவும் வெளியீட்டின் பௌதீக அளவு 800 ஆகவும் காணப்பட்டால் விலைமட்டத்தின் பெறுமதி யாது?

   1) 5 2) 10 3) 15 4) 20 5) 25

34. தரப்பட்ட பொருளாதாரம் ஒன்றின் பணநிரம்பல் ($M_1$) 1000m ஆகவும் பொதுமக்களிடமுள்ள பணம் 200m ஆகவும் சட்டரிதியான ஒதுக்க வீதம் 25% ஆகவும் அமைந்தால் பணப்பெருக்கியின் குணகம் யாது?

   1) 4 2) 0.25 3) 1.25 4) 2.5 5) 2

35. மத்திய வங்கி நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதன் இறுதி இலக்காக அமைவது.
   1) வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்தல்.
   2) பணநிரம்பலைக் கட்டுப்படுத்தல்.
   3) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
   4) நாணயத்தளத்தைக் கட்டுப்படுத்தல்.
   5) பொருளாதார வளர்ச்சியை அதிகரித்தல்.

36. மத்திய வங்கியினால் அரச பிணைகள் விற்கப்படின்.

| | பணநிரம்பல் | வங்கிகளின் ஒதுக்கு | நாணயத்தளம். |
|---|---|---|---|
| 1 | விழ்ச்சியடையும். | விழ்ச்சியடையும். | விழ்ச்சியடையும். |
| 2 | விழ்ச்சியடையும். | விழ்ச்சியடையும். | அதிகரிக்கும் |
| 3 | விழ்ச்சியடையும். | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4 | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5 | அதிகரிக்கும் | விழ்ச்சியடையும். | விழ்ச்சியடையும். |

37. பின்வரும் விடயங்களில் வணிக வங்கியொன்றின் சொத்தாக கருதமுடியாதது.
   1) கையிலுள்ள காசு
   2) கேள்வி வைப்பு
   3) வெளிநாட்டு நாணயங்கள்.
   4) மத்திய வங்கியிலுள்ள வைப்பு.
   5) திறைசேரி உண்டியல்கள்.

38. வணிக வங்கி முறையொன்றின் கேள்வி வைப்புக்கள் ரூபா 50000 காசு ஒதுக்கு ரூபா 12000 மிகை ஒதுக்கு ரூபா 2000 எனில் வைப்பாக்கப் பெருக்கியின் பெறுமதி யாது?

   1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

39. திறந்தசந்தை நடவடிக்கை என்பது,
1) கொழும்பு பங்குச் சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்தல் விற்பனை செய்தலாகும்.
2) மத்திய வங்கியானது வணிக வங்கிகளுக்கு கடன்களை வழங்குதலாகும்.
3) மத்திய வங்கியினால் அரச பிணையங்கள் கொள்வனவு விற்பனை செய்யப்படுதலாகும்.
4) அரசாங்கம் வெளிநாட்டு முறிகளைக் கொள்வனவு செய்தலாகும்.
5) ஏற்றுமதிகளை ஊக்குவிக்க அரசாங்கம் மானியங்களை வழங்குதலாகும்.

40. நியதி ஒதுக்குத்தேவை 20%மாக இருப்பதாகவும் ஒரு வணிகவங்கி 5000 புதிய வைப்பினைப் பெறுவதாகவும் கருதுக. இதன் விளைவாக பின்வருவனவற்றுள் வங்கியின் ஐந்தொகையில் ஏற்படக்கூடிய மாற்றம் எது?

| | பொறுப்புகள் | தேவைப்படும் ஒதுக்குகள். |
|---|---|---|
| 1 | 5000 ஆல் அதிகரிக்கும் | 4000 இனால் அதிகரிக்கும். |
| 2 | 5000 ஆல் அதிகரிக்கும். | 1000 இனால் அதிகரிக்கும். |
| 3 | 5000 ஆல் அதிகரிக்கும். | மாறாதிருக்கும் |
| 4 | 5000 ஆல் குறையும். | 1000 இனால் குறையும் |
| 5 | 5000 ஆல் அதிகரிக்கும். | 4000ல் குறையும். |

41. பொதுப் பண்டங்களின் பிரதான பண்பாக விலக்குதல் விதிக்குட்பட்டவையாக கருதப்படுகின்றது. இதன் கருத்து யாது?
1) பொதுப் பண்டங்கள் சகல நுகர்வோருக்கும் சமமான நன்மைகளை வழங்கும்.
2) பொதுப் பண்டங்களை வழங்கும்போது எவ்வித அமையச் செலவும் ஏற்படாது என்பதாகும்.
3) பொதுப் பண்டங்களுக்கு நுகர்வோர் எத்தகைய கொடுப்பனவையும் செலுத்தாவிடினும் நுகரமுடியும் என்பதாகும்.
4) பொதுப் பண்டங்களை வழங்குதலின் பொருட்டு அரசு எந்தவொரு வரியையும் விதிப்பதில்லை.
5) பொதுப் பண்டங்களை வழங்கும்போது எவ்வித எதிர்க்கணிய வெளிவாரி விளைவும் ஏற்படாது என்பதாகும்.

42. பின்வருவனவற்றுள் எது பொதுப்பண்டமாகும்.
1) தேசிய பாதுகாப்பு 2) பெருந்தெருக்கள் 3) கல்வி
4) சுகாதாரம் 5) போக்குவரத்து.

43. பின்வருவனவற்றுள் சந்தைத்தோல்வி குறிப்பது.
1) சந்தைக் கேள்வியும் நிரம்பலும் சமப்படாத நிலையாகும்.
2) சந்தையின் மூலம் வளங்கள் வினைத்திறனாக பங்கிடப்படாத நிலையாகும்.
3) உற்பத்தி நிறுவனங்கள் சந்தையைவிட்டு விலகிச் செல்லும் நிலையாகும்.
4) பொதுப் பொருட்களை போதியளவில் வழங்காத நிலையாகும்.
5) உச்ச பணவீக்கம் நிலவும் நிலையாகும்.

44. பொருளாதார வகைப்படுத்தலின்படி மூலதனச் செலவின் கூறுகள்.
1) மெய்ச் சொத்துக்களின் கொள்வனவு, மூலதன மாற்றல்கள், குறைச் செலவு ஒதுக்குகள்.
2) மெய்ச் சொத்துக்களின் கொள்வனவு, மூலதன மாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள்.
3) மெய்ச் சொத்துக்களின் கொள்வனவு, மூலதன மாற்றல்கள், கடன் தவணைக் கொடுப்பனவுகள்.
4) மெய்ச் சொத்துக்களின் கொள்வனவு, நடைமுறை மாற்றல்கள், குறைச் செலவு ஒதுக்குகள்.
5) கட்டடவாக்கம், மூலதன மாற்றல்கள், குறைச் செலவு ஒதுக்குகள்.

45. அரச இறைக்கொள்கையின் கருவிகள் யாது?
1) பணநிரம்பல், நிறை தொழில் மட்டம், அரசவருமானம்.
2) அரசவருமானம், அரச செலவு, அரச கடன்.
3) அரசவருமானம், அரச செலவு, அரச சேமிப்பு.
4) நியாயத்துவம், நிறைதொழில் மட்டம், பொருளாதார வளர்ச்சி.
5) நியாயத்துவம், நிறைதொழில் மட்டம், பொருளாதார அபிவிருத்தி.

46. 2018ம் ஆண்டின் இலங்கை அரசாங்கத்தின் நடப்புச் செலவீட்டில் ஆகக்கூடிய பங்கினை வகிப்பது.
1) வட்டிக் கொடுப்பனவு. 2) பாதுகாப்புச் செலவு 3) நுகர்வோர் மானியங்கள்.
4) கல்வி 5) சம்பளக் கொடுப்பனவுகள்.

47. 2018ம் ஆண்டின் இலங்கையின் வரிவருமானத்தில் ஆகக்கூடிய பங்கினை வகிப்பது.
1) வற்வரி. 2) வருமானவரி. 3) கலால் தீர்வை
4) இறக்குமதித் தீர்வை 5) ஏனைய வரிகள்.

48. பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| கொடை உட்பட அரசின் வருமானம். | 180000 | கொடைகள். | 20000 |
| நடைமுறைச் செலவினம் | 210000 | வட்டிக்கொடுப்பனவு | 15000 |
| கடன் தவணைக் கொடுப்பனவு. | 25000 | மூலதனச் செலவுகள். | 220000 |

மேற்காட்டிய தரவுகளிலிருந்து நடைமுறைக் கணக்கு மீதியும் முதன்மைக் கணக்க மீதியும் யாது.
1) -50000, -250000 2) -30000, -250000 3) -50000, -235000
4) -30000, -235000 5) -50000, -215000

49. 2018ம் ஆண்டின் இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச் சுண்டெண்ணின்படி பணவீக்க வீதம் யாது?
1) 3.2 2) 4.3 3) 5.5 4) 2.1 5) 6.6

50. 2018ம் ஆண்டின் வரி அரசிறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,
1) 12.4 2) 13.3 3) 11.9 4) 18.6 5) 19.2